348

பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனுர்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: பங்குனி கஎ ~~23~~ 30 3—56 தளிர்–23

OFFICE OF THE REGISTRAR ... 21 APR 1956

திருக்குறள் பிழிவு:

## சிறந்த குடிமக்கள்

நாட்டுக்கு நற் குடிகளும் இயற்கை வளனும் நல்லரசும் தேவை; நற்குடிகளே, இவற்றில் முக்கியம்; இயற்கை வளனும் நல்லரசும் குடிமக்களுக்காகவே வேண்டப்படும்; குடி தழுவி நடப்பதே செங்கோல்!

குடிமக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதிலும் திருவள்ளுவர்க்குக் கருத்துச் செல்கின்றது.

பொதுவாக நேர்மையுள்ளவர்களாய் முயற்சியுள்ளவர்களாய் ஆற்றலுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. நேர்மையில் அறமும், முயற்சியில் அறிவும், ஆற்றலில் தகுதியிணக்கமும் அடிப்படையாயிருக்கும். இம் முப்பால் நலமும் இருபாலார்க்கும் வேண்டும்.

நேர்மையாளர் 'தக்கார்' எனப்பெறுவர்; முயற்சியாளர், புதுப் புது உற்பத்திகள் செய்வோர்; ஆற்றலுடையோர், இணங்கியமைந்து நாட்டுக்கு அவற்றைப் பரவலாகப் பயன்படுத்துவோர். உழவு கைத்தொழில் முதலியவற்ருல் நாட்டுக்கு ஆக்கமான பற்பல பொருள்களை உற்பத்தி செய்வோரை ஆசிரியர் 'தள்ளா விளையுள் செய்வோர்' என்றும், நாட்டில் ஒருவருக்கொருவர் உதவியுந்துணையுமாய் இருக்கும்படி அவற்றைப் பண்டமாற்று முதலியவற்ருல் பரவச் செய்வோரைத்'தாழ்விலாச் செல்வர்' என்றும் கூறுவர். இவ்விரு சாராரையும் நேர்மையில் வழுவாமல் தம்முடைய நடையுடை பாவனைகளால் நிலைக்கவைப்போரே 'தக்கார்' என்னும் அறவோராவர்.

குடிமக்கள் அனைவரும் இவ்வாறு தத்தமக்கு இயன்ற சிறப்பில் திகழ்க என்பது கருத்து.

“முல்லைக் கொடி”

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”
—புறநானூறு.

| கிளை | மன்மத, | தளிர் |
|---|---|---|
| 8 | 30-3-56 | 23 |

# வாழ்வும் இலக்கியமும்

### அரசர்க்குத் தூண்டுகோல்:

“இடிப்பாரை இல்லாத
ஏமரா மன்னன் கெடுப்பா
ரிலானுங் கெடும்”

என்பது வள்ளுவர் வாய்மொழி. இஃது, ஓர் அரசனுக்கு மட்டும் கூறப்பட்டதன்று; மக்களுக்கும் கூறப்பட்டதாகும். “சுடர் விளக்கிற்கும் ஒரு தூண்டுகோல் வேண்டும்” என்கிற முதுமொழி, மேற்கூறிய குறள் வழியாகத் தோன்றியதாகவும் கருதலாம்.

தமிழ் நாட்டில், பெருஞ் சித்திரனார், ஔவையார் போன்ற பெருமிதப் புலவர்களாகிய தூண்டு கோல்களால் தமிழரசர்கள் ஆட்சி நடத்தினர். ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் அவற்றிற்கு உடன் சேர்ந்தன.

### மக்கட்குத் தூண்டுகோல்:

ஒரு அரசனுக்குப் பலர் இடிக்குங் கருவிகளாக, தூண்டு கோல்களாக, இருக்கமுடியும்; ஆனால் குடிமக்கட்கு இருத்தல் மிகவும் அருமை. ஒவ்வொருவரிடமும் சென்று அவர்கள் செய்யும் தீமையான செயல்களை எடுத்துக் கூறித் திருத்துவது என்பது இயலாதது. அவர்களுக்கு அறிவியல் நூல்களை அறிவித்து அதன் உதவியால் இடித்துரைத்தல் என்பது இயலும். எனவே இப் பணிக்கு நல் இலக்கியம் தேவைப்படுகின்றது.

ஒரு நாட்டு மக்களைத் திருத்த முயல்வது அல்லது அந் நாட்டுமக்களின் நல்வாழ்விற்கு அடிகோல முனைவது, இலக்கியமே. இவற்றிற்கு எந்த நாட்டில் விதி விலக்கு இருந்தாலும் தமிழகத்தில், விதி உண்டே தவிர விலக்கு இல்லை.

### பழந்தமிழ் இலக்கியம்:

பழந்தமிழ் இலக்கியம் காதலையும், வீரத்தையுமே அடிப்படையாகக் கொண்டது. இதனைத் தழுவியே அகநானூறும் புறநானூறும் எழுந்தன. ஒருவனின் இன்பமான வாழ்க்கைக்குக் கருவியாக உள்ளது இல்லறம். எனவே தலைவியும் தலைவனும் ஒருவருக் கொருவர் அன்போடு இணைந்து நிற்றல் வேண்டும். இதன் பொருட்டே உண்மையான காதல், இலக்கியத்தில் இடம் பெற்றது. மாற்றாரின் சீற்றத்திற்கு அஞ்சி, தன் மானம் இழந்து வாழ்க்கையை நடத்தாமல், அவர்களின் வீரத்தைச் செருக்களத்தில் புறமுதுகு கண்டு, பெருமிதத்தோடு நல்வாழ்வு நடத்த, வீரமும் இலக்கியத்தில் இடம் பெற்றது இதனால் பழந்தமிழர் வாழ்வும் இலக்கியமும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன என்றும் கொள்ளலாம்.

### இலக்கியமும் சான்றோரும்:

ஒரு நாட்டில் இலக்கியம் வளர்ந்து வருமானால் அந்நாட்டில் பல சான்றோர் இருத்தல் வேண்டும். பிசிராந்தையார், தமக்கு நரையோ, திரையோ இல்லாமைக்குக் காரணமாகக் கூறியவற்றுள், “சான்றோர் பலர் யான் வாழுமூரே” எனச் சான்றோரையும் குறிக்கின்றார். எனவே, சான்றோரை யுடைய நாடு இலக்கியங்களைக் கொண்டிருக்கும்; அதனால் மக்கள் நல்வாழ்வு நடத்த ஏதுவாகின்றது. சான்றோர் பெருக, இலக்கியம் வளரும்; இலக்கியம் வளர, அறம் பெருகும்; அறம்

மத்திய வேதம் - பாரதம் 2 (உ)
மதம் - கொள்கை, 23 (உ)
மதிப் புலவோர்க்கு ஆய்தொறும் ஊறும் அறிவு, 31
மதுரை. பாண்டியன் தலைநகர், 10 (உ)
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனர், 35
மதுரைத் தமிழ் நாகனர், 29
மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார், 34
மதுரைப் பாலாசிரியனர், 52
மதுரைப் பெருமருதனர். 37
மருத்துவன் தாமோதரனர். 11
மலர் - தாமரை மலர், 12
மலர்ப் பொய்கை - குளிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக் குளம், 12 (உ)
மறந்தேயும் - மறந்தாயினும், 8
மறன் - பகைவரை, 50 ஆகு பெயர்
மறு - குற்றம். 21
மறைகள் ஐந்து - இருக்கு முதல், பாரதம் ஈருக வேதங்கள் ஐந்து, 44
மன்பதைகட்கு - மக்கட் பரப்புக்கு, 33.
மன்புலவன் - புலவர்க்கரசன் வள்ளுவன், 3
மன்னு தமிழ் - நிலைபெற்ற தமிழ், 16
மனத்திற்குக் குற்றம் - பிறன் இல் விழைதல், பிறன் பொருள் விழைதல், பிறன் பொருட்குக் கேடு எண்ணல், பிற உயிர்க்கு இறுதி எண்ணல்கள், 39 (உ)
மனு, 30; மனுமிருதி பழைய வேதத்தை ஒக்கும்.
மா - குதிரை, 10.
மாங்குடி மருதனர், 24
மாண்ட - மாட்சிமைப் பட்ட, 19
மாதானுபங்கி - மாதா அநுபங்கி, மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினன்; உயிர்கள் மேல் அருளாளன்; என்பது, 21
செருக்கொழிதலுடையான் என்பாரும் உளர் (உ)
மாமூலனர், 8
மால் - பெரிய, 11
மாற - பாண்டியனே, 2
32, 50
மீனக் கொடி, பாண்டியனுடையது, 10 (உ)

முக்கொடி – விற்கொடி, புலிக் கொடி, மீனக் கொடி, 10
முகையலூர்ச் சிறுகருந் தும்பியார், 17
முடி – தலையணி, 10
முத்தமிழ் – இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ், 10.
முதல் வழி சார்பு என மூவகைப் பட்ட நூல், 29 [உ]
முதற் பாவலர் – முதன்மை யுடைய பாவலர்; நால் வகைப் பாக்களில் தலைமை பெற்ற வெண்பாக்களுள் ளும் குறள் வெண்பா வால்நூல் செய்த வல் லமையுடையர் என்று மாம், 18
முதுமொழிநூல் – பழமொழி வேதம், 33 கடவுள்மொழி, தேய வழக்கிற் படாதது, வருந்திக் கற்போர்க்குமாத் திரம் புலப்படுவது, எல்லா மொழிகட்கும் முற் பட்டது(உ)
முதுவோர்மொழி – பெரியோர் நூல்கள், 38 மருநூல் முத லியன.
முந்திய நன்னெறி – இது நன் மக்களுக்கு அநாதியாய் அமைந்துள்ளது, 51 அது சமயத்தாரது பலவகைப் பட்ட கற்பனையினுலேயே மறைப்பட்டு நின்றது.
முந்நதி – பொருநை நதி, காவிரிநதி, வைகை நதி, 10
முந்நாடு – குடநாடு, புனல் நாடு, தென்னுடு, 10.
முப்பதி – கருவூர், உறையூர், மதுரை, 10
முப்பால் – திருக்குறள், 9, 10, 11, 12, 15, 17, 18, 30, 31, 39, 46, 53, தமிழின கண் ணதாகிய முப்பா லாகிய அதன் மும்மடி சிறந்த பால், 53 [சிலிஷ்ட ரூபகம்] இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன் படுவது.
முப்பால் நூல், 46
மும்மலை – கொல்லிமலை, நேரி மலை, பொதிய மலை, 10
மும்மா – கனவட்டம், பாட லம், கோரம் என்னும் குதிரைகள், 10
மும்முரசு – மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு, 10.
மும்மை – முப்பால், 40
முற்றுமோனை. 10 [உ]



த

தப்பா முதற்பாவால். 19
தாளார் மலர்ப்பொய்கை. 12
தானே முழுதுணர்ந். 7
திருத்தகு தெய்வத். 1
தினையளவு போதாச். 5
தேவிற் சிறந்த. 39

ந

நாடா முதல் நான். 2
நான் மறையின். 4

ப

பரந்த பொருளெல்லாம். 13
பாயிர நான்கில். 25
புலவர் திருவள். 34
பூவிற்குத் தாமரையே. 36
பொய்ப்பால பொய்யே. 49

ம

மணற் கிளைக்க நீருறும். 31
மாலுங் குறளாய். 6
மும்மலையும் முந்நாடும். 10

வ

வள்ளுவர் பாட்டின். 53
வீடொன்று பாயிரம். 20
வெள்ளி வியாழம். 52
வேதப் பொருளை. 42

# திருவள்ளுவ மாலை

## பாட்டு முதற் குறிப்பு

[எண் -- செய்யுள் எண்]


அ

அணுவைத் துளைத்தேழ். 55
அரசிய லையைந், 26
அறந்தகளி ஆன்ற. 47
அறநான் கறிபொருள். 22
அறம் பொரு ளின்பம்வீ. 8
அறமுதல் நான்கும். 38
அறமுப்பத் தெட்டும். 37
அறனறிந்தேம் ஆன்ற. 50
ஆண்பாலே ழாறிரண்டு. 27
ஆயிரத்து முந்நூற்று. 16
ஆரியமும் செந்தமிழும் 43
ஆவனவும் ஆகா. 41
ஆற்ற லழியுமென். 15

இ

இம்மை மறுமை. 40
இன்பம் பொருளறம். 33
இன்பமும் துன்பமும்- 35

உ

உப்பக்கம் நோக்கி. 21
உள்ளக் கமலம். 48
உள்ளுத லுள்ளி. 17

எ

எப்பொருளும் யாரும். 30
எல்லாப் பொருளும். 29
எழுத்தசை சீரடி. 45
என்றும் புலாா. 3

ஏ

ஏதில் வள்ளுவர். 32

ஐ

ஐயாறு நூறும். 28

ஒ

ஒருவர் இரு குறளே. 44
ஒன்றே பொருளெனின். 9

ஓ

ஓதற் கெளிதாய் 24

க

கடுகைத் துளைத்தேழ். 54
கலை நிரம்பிக் காண்டற். 46
கான் நின்ற தொங்கலாய். 14

ச

சாற்றிய பல்கலையும். 18
சிந்தைக்கினிய. 51
சிந்திநீர்க் கண்டர். 11
செய்யா மொழிக்கும் 23.


முறை – திருமுறை, 4 [உ]
கிடக்கை யொழுங்கு, 7 (உ)
நூல், 38

முறைமையால் – காரண காரிய ஒழுங்கால், 37

முன்பு – ஆயுள் நீட்சியும் உணர்வு வலியும் இருந்த 'உற்சர்ப்பிணி' என்னும் வளர் காலமாகிய அக் காலம், 33. [உ]

முன்னைமுதுவோர் – முற்காலப் பெரியோர், 38; வடமொழி தென்மொழி பிற மொழி களில் நூல் செய்த முனி வரும் புலவரும் பிறரும்.

மூழ்குதல் – இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றல் மேல் நின்றது, 12 [உ]

மெய்ப்பால – மெய்யின் பகுதி யிற்பட்டவை, 49

மெய்ப் பொருள், 53 (உ)

மேதக்கன – மேம்பாட்டுக்குத் தக்கவை, 32

மோசி கீரனுர், 27

ய

யாணர் – அழகு, 3

யானை – யானைபோலுள்ள அரசனே, 11

வ

வண்ணக்கஞ் சாத்தனர் 43

வண்ணம் – குறிலகவல் தூங்கிசை வண்ணம் முதலியன. 45

வரிவடிவு, இதற்கு இடம் மண், 14 (உ)

வல்லார் – வலியில்லார், 15

வழுக்கி – வழுவுதல், 37, விதியை விலக்கென்றும் விலக்கை விதி என்றும் கோடல், (உ)

வழுதி – பாண்டியமன்னன்; 19

வள்ளை – உலக்கைப் பாட்டு 5

வள்ளுவர் – வண்மையுடையர் 1 (உ)

வள்ளுவர் பாட்டு, 53

வள்ளுவர் வாய்மொழி – வள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறள், 42

வளம் – தீஞ்சுவை, 53 (ஆகு பெயர்)

வனப்பு – அம்மை அழகு தொன்மை தோல் முதலி யன, 45

வாக்கியப் பிரமாணம், 2 (உ)

வாக்கிற்குக் குற்றம் – கடுஞ் சொல், பொய், கோள், புறங் கூறல்கள், 39 (உ)

**வாய்மடுக்கும்** – உண்ணப்படுகின்ற. 53

**வாய்மொழி** – வாயினின்றுந் தோன்றிய திருக்குறள், 24; வாய்மைச் சொல்லையுடைய திருக்குறள், 31

**வாயால்** – வாக்கால், 50

**வாலறிவு** – மெய்யறிவு, 6

**வாயுறை வாழ்த்து** – திருக்குறள்; மருந்து போல் இடித்துரைக்கும் அறிவுரை, 35 (உ)

**விசேடணம்** செய்யப்பட்டது 18 (உ)

**விதி** விலக்குகள், 29 (உ)

**வியாழம்** – குரு; சுரகுரு, 52

**விரகால்** – உபாயத்தால், 42

**விரகால் விரித்தல்** – சொற் சுருக்கத்தால் மனவெழுச்சி உண்டாக்கி, கற்போரது அறிவளவிற் கேற்கப் பொருளளவு விரியவைத்தல், 42

**விருந்து** – நூலழகின் வகை. 45 உ

**வில்** கொடி, சேரனுடையது. 10 உ

**விழுப்பொருளை** – உயர்வாகிய பொருளை, 37

**விழுமியது** பயத்தல். 24 உ

**வீட்டின்பம்** – மெய்ப்பொருள் உணர்ந்தன்றிக் கூடாமை. 53 உ

**வீட்டு விதி** – துறவறத்திற் காண்க. 40

**வீடு**– விட்டு. 20

**வீடு ஒன்று பாயிரம்** – அறத்துப்பாலை விட்டுப் பொதுவாய் நிற்கும் பாயிரம். 20

**வீற்றிருத்தல்** – ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் ஏறியிருத்தல். 16

வெங்கதிர் 48

வெள்ளி – சுக்கிரன். 52

வெள்ளி வீதியார். 23

வெற்றி முரசு. சோழனுடையது; தமிழரசர் மூவர்க்கும் பொதுவாயினும் சோழன் குடிமரபிற்கு உரிமை இயைந்தது. 10 உ

வேதமே – வேதங்களோ. 32

வேத விழுப்பொருள் – கருமகாண்டம் பிரமகாண்டம் இரண்டினுள்ளும் சிறந்த பொருள். 37 உ

வேளாதொழிதல் – விரும்பாதொழிதல். 12

வேற்றுமை மயக்கம். 46 உ

வை – கூர்மை. 19

வைகை நதி பாண்டியனுடையது. 10 உ

வையத் துணை – திருக்குறள்; சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதி விலக்குகள் முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித் தடுமாற்றம் தீர்த்தலின். வையத்துணை என்றார். 29 உ

பெருக, மறம் தேய்ந்து, அன்பு நிறைந்து, அறியாமை நீங்கும். புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில், அக்காலத்து நிலைமைகளை நன்குணர்ந்து, நன்மை தீமை ஆகியவைகளை அறிந்து, அதற்கேற்ப நம் வாழ்க்கை முறைகளைச் செம்மைப்படுத்த முற்படுகின்றோம்.

ஏணியும் தோணியும்:

திருக்குறள், இல்லறம் நடத்துபவனுக்கு ஏணியாகவும், துறவறம் மேற்கொள்பவனுக்குத் தோணியாகவும் காட்சியளிக்கின்றது.

சிலம்பு, கற்புடையாள் கண்ணகியின் திறம் உணர்த்துவதோடு, கற்பின் பெருமையையும் நிலைநாட்டுகின்றது. பாண்டிய மன்னன் நெறியினின்றும் நீங்கிக்கோவலனைக்கள்வன் எனக் கருதிக் கொலைக் குற்றம் புரிந்தமையால், அவனுக்கு ஏற்பட்ட இறுதி நிலையை எடுத்தியம்புகின்றது. இலக்கியம் இத்தகைய நிகழ்ச்சிகளை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாமல் அந்நாட்டு மக்களின் பண்பாட்டையும் அரசியல் முறைகளையும் படம்பிடித்துக் காண்பிக்கின்றது.

தூண்டலும் பண்படுத்தலும்:

ஒரு அரசன் குற்றம் புரிந்து, பல கொடுமைகளுக்குள்ளாகி, பலர் பெருமைப்பட நல்லாட்சி நடத்தினான் என்று எந்தத்தமிழ் இலக்கியமும் கூறக் காணோம்; மாறாகத் தவறிழைத்த மன்னர்களைத் திருத்தின. பெண் கொலை புரிந்த நன்னனைப் பழித்தது தமிழ் இலக்கியம்; பாரியை வஞ்சித்துக் கொன்ற மூவேந்தர்களை முனிந்து கூறியது முத்தமிழ் இலக்கியம்; தந்தையை எதிர்த்து வந்த தனையர்களிடம் போர்செய்வது முறையன்று, என்று எடுத்துக் கூறியது இளந்தமிழ் இலக்கியம்; மக்களிடம் முறையின்றி இறைகொண்ட மன்னனைத் திருத்தியது தண்டமிழ் இலக்கியம். எனவே தமிழ் இலக்கியம் – பொதுவாக இலக்கியம் – அக்காலத்திலேயே மக்களுக்குத் தூண்டுகோல்களாக இருந்தன; இன்றும் அதே இலக்கியம் மக்களின் வழிகாட்டியாக உள்ளது. இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட தமிழ் இலக்கியங்களைச் சொல்லளவில் மேற்கொள்வதோடு நின்றுவிடாமல், நடைமுறையிலும் கையாள்வோமாக.

இரா. பா.

---

## மனிதப் பிராணி

### (டார்வின் கண்ணோட்டத்தில்:)

நமது உள்ளம் மனிதனைப் பிராணிக் கூட்டத்தில் சேர்க்க விரும்பாது.

அலபாமாவில் நீக்ரோப் பெண் லூசியை வெள்ளை மாணவர் படிக்கும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள மறுத்ததாகவும் பிறகு நீதிமன்ற உத்திரவால் அனுமதிக்கப்பட்டதாகவும் பத்திரிகையில் படித்தோம். ஆனால் வெள்ளையருடைய உள்ளம் நீதிபதி விதித்த முடிவை விரும்பவில்லை. லூசியைப்போன்ற மாணவிகளருகில் உட்கார வெள்ளையர்கள் மனம் கசப்பு அடைகிறது.

#### மனிதருக்கு மனிதர்

நம்மைத் தான் எடுத்துக் கொள்வோம். தீண்டாமையை ஒழிக்க மகாத்மா காந்தி எவ்வளவோ பிரசாரம் செய்தார்; இன்று தீண்டாமையை அனுசரிப்போர்க்குச் சட்டப்படி தண்டனை விதிக்கப்படும். எனினும் மேல் சாதியினர் கீழ்ச்சாதினரோடு பழகுவதற்கு விருப்பமில்லாதவர்களாகவே இருந்து வருகின்றனர்; கீழ்ச்சாதியினரையும் மேல் சாதியினரையும் ஆராய்ந்து பார்த்தால் இரு வகுப்பினர்க்கும் உண்மையில் வித்தியாசமே இல்லையென்பதை விளக்கிவிடலாம். சூழ்நிலைதான் வித்தியாசத்திற்குக் காரணம். இதை ஒன்றுபோல் அமைக்கும்போது வித்தியாசம் மறைந்து போகும்.

#### மூளையில் வேற்றுமை

இத்தகைய காரணங்களாலேயே மனிதன் பிராணிக் கூட்டத்தோடிருக்கும் தொடர்பை ஒப்புக் கொள்ள மறுக்கிறான். மனிதனுக்கும் அடுத்தபடியாக உலகில் இன்று காணும்பிராணியாகிய கொரில்லாக் குரங்கிற்கும் மூளை வகையில்தான் பிரமாதமான வித்தியாசம் காண்கிறோம். வேறு விஷயங்களில் இரு வகுப்புக்களுக்கும் எவ்வளவோ தொடர்பிருக்கிறது. இந்த ஒரு விஷயமாகிய மூளை நிமித்தம் உண்மையுறவை மறுப்பதா? பிராணி வகுப்புக்களைப் பிரிக்கும் போது நாம் அனுசரிக்க வேண்டிய விதிகளை டார்வின் விளக்குகிறார். இதற்கு

ஓர் உதாரணம் எடுத்துச் சொல்லுகிறார்.

## பூச்சி இனம்

எறும்பு பூச்சிவர்க்கத்தைச் சேர்ந்தது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். பூச்சி என்று சொல்லும் போது சில அறிகுறிகளை எதிர்பார்க்கிறோம்; சாதாரணப் பேச்சிலே சிலந்திப்பூச்சி, நாக்குப் பூச்சி, தேள் போன்ற இனங்களை யெல்லாம் பூச்சிகள் என்றே சொல்வதுண்டு. ஆனால் பூச்சி என்னும் வகுப்புப் பிராணிகட்கு உயிர்நூல் விதிப்படி ஆறு கால்களும், உடலில் மூன்று பகுதிகளும் இருப்பதாய்க் கருதப்படுகிறது. இந்தப் பகுதியைச்சேர்ந்தவை எறும்பு, பட்டுப் பூச்சி, பேன்பூச்சி போன்ற பிராணிகள். இறகு இருந்தாலும் இல்லாது போனாலும் ஆறு கால் இருந்தே தீரும். மனிதன் பிராணி உலகில் உன்னத நிலையை அடைந்திருப்பது போல் பூச்சி வர்க்கத்தில் எறும்பும் அடைந்திருக்கிறது.

## எறும்பின் உயர்நிலை

உயிர் நூல் விஞ்ஞானிகள் எறும்பின் புத்தித் திறமையைப் பற்றி நூல்கள் பல இயற்றியுள்ளனர். அவ்வளவு திறமைவாய்ந்தது எறும்பு, எறும்புகள் ஒன்றோடொன்று செய்தி தெரிவித்துக்கொள்ளுமாம். சில மாதங்கள் பிரிந்த பிறகு எறும்புகள் ஒன்றையொன்று அறிந்துகொள்ளுமாம். நதிக் கடியே கூட சுரங்கம் தோண்டுமாம். ஒன்றோடொன்று தொடுத்துக் கொண்டு நதிக்குப் பாலம் கட்டித் தாண்டுமாம். எறும்புச் சமூகத்திற்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிக் கொண்டு வரும். சேமித்த தானியத்தை ஈரம் போக உலர்த்திக் கொள்ளும். போருக்குக் கூட்டம் கூட்டமாகச் செல்லும். அடிமைகளை இழுத்துச் செல்லும். அசிர்ப் பூச்சியைத் தன்னினத்திற்குப் பசுவைப் போல் வளர்த்து ரசம் சுரந்து புசிக்கும். பூஞ்சணத் தோட்டம் பயிர் செய்யுமாம். எறும்புகளின் திறமையைப் பற்றி எவ்வளவோ எழுதிக் கொண்டே போகலாம்.

## மற்றொரு பூச்சி

பூச்சி வர்க்கத்தில் சேர்க்கப் பட்ட வேறொரு வகைப் பிராணியைப் பார்ப்போம். புத்தித் திறமையில் இதற்கும் எறும்புக்கும் உள்ள வத்தியாசம் யானைக்கும் பூனைக்கும் இருக்கும் அளவாகும். குஞ்சு நிலையிலேயே தன் நாக்கினால் செடியோடு ஒட்டிக்கொண்டு சாரத்தை உறிஞ்சி வாழும். பெண் ஆணோடு செடியிலிருந்து அசையாமலே புணர்ந்து குஞ்சு பொரிக்கும். இதுவே அதன் முழு வாழ்வு. இவ்வளவு மந்தமான ஒரு பிராணியையும் எறும்பையும் பூச்சி வகுப்பில் வைப்பது சரியா என்று கேட்கலாம். இதுபோன்ற கேள்விதான் மனிதனையும் குரங்கையும் ஒரே வகுப்பில் வைப்பதா என்று கேட்பதும் என்றார் டார்வின்.

## பிராணி வகுப்புக்கள்

பிராணி வகுப்புகளைப் பிரிக்கும்போது பெரும் வித்தியாசங்களை மட்டும் கண்டு, வகுப்பு வேற்றுமைகளாக எண்ணிவிடக்கூடாது. மாபெரும் வித்தியாசங்கள் சமீபகாலத்தில் ஏற்பட்டவையாக இருக்கலாம். (ஜீவராசிகளுடைய ஆயுளை அனுசரித்துச் சொல்லும் போது சமீப காலம் என்று ஒரு கோடி ஆண்டுகளைக் கூடக் குறித்து விடலாம்.) அதுபோலவே நுட்பமான வேற்றுமைக் குறிகள் புராதன காலத்தில் அதாவது பல கோடி ஆண்டுகளுக்கு முன்பேயிருந்து தோன்றியவையாகையால் இரு பிராணிகளை ஒரே இடத்தில் சேர்க்க ஆதாரமாகலாம்.

நிலத்திலிருந்துசென்றவை:

திமிங்கிலமும் மீனும் பல வகையில் ஒரே மாதிரி அமைப்புடையவை. இரண்டும் நீரில் வாழும் பிராணிகள். இரண்டிற்கும் இறகுகள் உள்ளன. இன்னும் பலவகையில் ஒன்றுபோலிருந்தும் இரண்டையும் ஒரே குடும்பத்தில் சேர்க்க இயலாது. சற்று ஆராய்ந்து பார்த்தால் திமிங்கிலத்திற்கு நிலத்தில் வாழும் பாலூட்டிய பிராணியைப் போல் கால்கள் உள்ளன. ஆனால் இவை மிகவும் குறுகியவையாயிருக்கும். திமிங்கிலத்திற்கு சுவாச கோசங்கள் உள்ளன. மூச்சு ஏற்றுக் கொள்ளவென்று நீர்மட்டத்தைத் தாண்டித் தலை தூக்கி மூச்சு விட்டுப் புதிய காற்றை ஏற்றுக் கொள்ளும். இவ்விரண்டு முக்கிய அறிகுறிகளாலே திமிங்கிலத்தைப் பாலூட்டிகள் குடும்பத்தில் சேர்க்கிறோம். நிலத்திலிருந்து நீரில் வாழச் சென்றதெல்லாம் சமீப காலத்திலேதான்.

'தி,

Phone 55034 Tel Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்.
53, கிடங்குத் தெரு. சென்னை 1.